Total No. of Questions : 50 ]
Total No. of Printed Pages : 4 ]

**Code No. 04**

# June/July, 2010
# TAMIL

Time : 3 Hours 15 Minutes ] [ Max. Marks : 100

***மாணவர்கள் கவனிக்க :***

i) வினாக்களின் எண்களைச் சரியாக குறிப்பிடவும்.

ii) விடைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

iii) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

ஒரு வரியளவில் விடை தருக : 10 × 1 = 10

1. பாண்டியனின் புகழில் கிடந்தது எது ?
2. யாரைக் காலமறிந்து வெல்ல வேண்டும் ?
3. கண்ணன், கன்னனிடம் வேண்டியது என்ன ?
4. நால்வகைப் படைகள் யாவை ?
5. சுவைமிக்க வெற்றிலை எப்போது கிடைக்கும் ?
6. யாரால் என்றும் தனித்து வாழ முடியாது ?
7. மக்கள் கவிஞர் என்று பாராட்டப் பெற்றவர் யார் ?
8. திப்பு சுல்தானின் இராணுவத்தில் இருந்த ராக்கெட் ஏவும் வீரர் அடங்கிய அணியின் பெயர் யாது ?
9. ஏவுகணைச் சோதனைத் தளம் எங்கு அமைக்கப்பட்டது ?
10. I.G.M.D.P திட்டத்தில் எத்தனை பங்குதாரர்கள் இடம் பெற்று இருந்தார்கள் ?

## பகுதி - II

அ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 4 × 2 = 8

11. திருத்தக்க தேவர் அருகதேவனின் சிறப்புகளை எவ்வாறு பாடுகின்றார் ?
12. 'பாம்பறியும் பாம்பின் கால்' - பழமொழியை விளக்குக.
13. குந்தியிடம் அசரீரீ கூறிய செய்தி யாது ?
14. பாண்டிய நாட்டின் வளம் முத்தொள்ளாயிரத்தில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
15. புறாவைக் கொண்டு உலக உண்மையை பாரதிதாசன் எவ்வாறு விளக்குகின்றார் ?

[ Turn over

ஆ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

16. நம் நாட்டில் ஒய்வு நேரப் போக்கு எவ்வாறு உள்ளது என்கிறார் அறிஞர் அண்ணா ?

17. வெற்றிலை எவ்வெவச் சடங்குகளில் இடம் பெற்றது ?

18. வீட்டைக் கட்டும் போது எவ்வெவற்றை மனத்தில் கொள்ள வேண்டும் ?

19. நாட்டுப் புறப்பாடலின் சிறப்புகளை எழுதுக.

இ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

20. பிரார்த்தனை பற்றி அப்துல்கலாமுக்கு அவர் தந்தை கூறியது யாது ?

21. பேராசிரியர் குரியன் அப்துல்கலாமுக்கு எவ்வாறு உதவினார் ? அவர் வழங்கிய பாராட்டு எத்தகையது ?

22. அமெரிக்காவைப் பற்றி வார்னர் வன் பிரான் கூறிய கருத்தினை எழுதுக.

23. அப்துல்கலாம் இந்திராகாந்தியை எஸ்.எல்.வி.-3-இன் வெற்றிக்குப் பிறகு சந்தித்தது பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி - III

அ. எவையேனும் **இரண்டிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 2 × 3 = 6

24. ‘இமயமுதல் குமரி வரை பரந்தநாடு

    எழில் கங்கை காவேரி பாயும் நாடு’

25. ‘தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்

    சாந்தின் தொடுத்த தீந்தேன் போல’

26. ‘............... உன்னோடு வந்துரைக்கும் விண்ணப்ப முண்டு’

ஆ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

27. ‘‘கூத்துப் பார்த்ததில் கண்ணுக்கும், காதுக்கும் விருந்து பெற்றான்’’

28. ‘‘நடு கல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த

    வீரனின் பெயரும், பெருமையும் வரையப்படும்’’

இ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

29. ''ஒரு அதிநேர்த்தியான திட்டத்தை அடுத்த வாரம் செயல்படுத்துவதை விட ஒரு நல்ல திட்டத்தை அதிரடியாக இப்போது செயல்படுத்துவது மேல்''

30. ''நீங்கள் எதைக் கற்பனை செய்கிறீர்களோ அதுதான் செயல் வடிவம் பெறும்; நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதைத்தான் சாதிக்க முடியும்''

## பகுதி - IV

அ. எவையேனும் **மூன்றிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 3 × 5 = 15

31. இவ்வுலகம் நிலைபெற்றிருப்பதற்குக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறியுள்ள காரணங்களைத் தொகுத்தெழுதுக.

32. பொருள் செயல்வகை குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

33. கோவலன் கருணை மறவனாகச் செயல்பட்ட பாங்கினை விளக்குக.

34. நாம் என்னென்ன செய்ய வேண்டும் எனப் பாரதியார் பாடுகின்றார் ?

ஆ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

35. கல்வி குறித்துத் திருவள்ளுவரும், ஔவையாரும் கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

36. உரைநடை விடுகதையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் ஆகிய இருவரின் நட்பின் உயர்வைப் புலப்படுத்துக.

இ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

38. கணக்கு வாத்தியார் இராமகிருஷ்ண ஐயருக்கும் அப்துல்கலாமுக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியினைக் கூறுக.

39. அப்துல்கலாமின் தந்தையார் காலமானதைப் பற்றி கலாம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

40. அப்துல் கலாம் தம் வாழ்க்கை வரலாற்றை எழுதியதற்குக் காரணங்களாகக் குறிப்பிடுவன யாவை ?

## பகுதி - V

அ. கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்குக : 1 × 5 = 5

41. ‘வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப ! - அதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்’

ஆ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 4 × 2 = 8

42. எதிர்ச்சொல் தருக :
   i) சிரிப்பு
   ii) ஏழை.

43. வாக்கியத்தில் அமைக்க :
   i) மாடமாளிகை
   ii) புனித வாழ்வு.

44. பிரித்தெழுதுக :
   i) பாடம்புகட்டும்
   ii) புகழ்பெற்ற.

45. தொடர்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக :
   i) பரவை இறையாகப் பயிரு வகைகலைத் திண்ணும்
   ii) ஆண் குளந்தை பிறந்தது.

46. சேர்த்தெழுதுக :
   i) பொருள் + பயன்
   ii) நின் + மகள்.

## பகுதி - VI

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

47. மாணவரும் சமுதாயத் தொண்டும்.

48. உடற்பயிற்சியும் நோயற்ற வாழ்வும்.

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை தருக : 1 × 5 = 5

49. நீவிர் குடியிருக்கும் பகுதியில் நூலக வசதி செய்து தருமாறு உரிய அதிகாரிக்குக் கடிதம் ஒன்று வரைக.

50. ‘பழகப் பழக பாலும் புளிக்கும்’ - என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைக்கவும்.